## எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அறிக்கை

**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றமானது (NCCSL) இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய தமது இறையாண்மையை விடாமுயற்சியுடனும், பொறுப்புடனும் செயற்படுத்துமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இதனை செயற்படுத்துவதற்கு நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டியது அவசியமாவதுடன் அடுத்தடுத்து இடம்பெறவிருக்கும் சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதும் அவசியமாகின்றது. இது அரசியலமைப்பு சார்ந்த, பல்-கட்சி சனனாயக முறைமைக்கு இன்றியமையாததோர் அம்சமாகும்.**
முறையானதும், சுதந்தரமானதும், நியாயமானதுமான தேர்தல்கள் ஒரு சனனாயக சமூகத்தின் முக்கியமானதோர் அம்சமாக அமைகின்ற அதேவேளை மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு இது மிகவும் அத்தியாவசியமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக, அரசியலமைப்பிற்கு அமைவாக இவ்வருடத்தின் பிற்பகுதியில் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்திய உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பை இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCC) வரவேற்கிறது.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் பாதிப்புக்குட்படுத்தியுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மூலகாரணங்கள் அரசியல் சார்ந்தவையே என்பதை NCC மக்களுக்கு நினைப்பூட்ட விரும்புகின்றது. அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துபவர்கள் மீது போதியளவு சோதனைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் சமநிலையான நிலைமைகள் காணப்படாமை, நிர்வாகத்தின் திறனற்ற நுண்ணாய்வு மற்றும் சட்டவாக்க மன்றத்தின் திறனற்ற ஒத்துழைப்பு ஆகிய விடயங்களின் காரணமாக சமீப ஆண்டுகளில் நாட்டை ஒடுக்கிக் கொண்டிருக்கின்ற முறையற்ற பொருளாதார முகாமைத்துவம், ஊழல் மோசடிகள் மற்றும் உரிய பொருளாதார ரீதியான நியாயப்படுத்தல்கள் இன்றிய வீண் திட்டங்களுக்கான செலவுகள் ஆகியன சாத்தியப்படக்கூடிய விடயங்களாகக் காணப்பட்டன. இதினிமித்தம், பயனுள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் எதுவும் காணப்படவில்லை.

ஒரு நபர் மற்றும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி என்பவற்றைக் கருத்திற்கொள்ளாமல், ஒரு தனிநபரிடம் பாரிய அதிகாரங்கள் குவிந்திருப்பதானது அரசியலமைப்பு மற்றும் சனநாயக நெறிமுறைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் விடயமாக அமைவதன் காரணமாக NCC ஆனது பலம்வாய்ந்த நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறையை ஒழிப்பதற்கான தன் அழைப்பை மீண்டும் வலியுறுத்துகின்றது. மிகையதிகார சனாதிபதி முறைமை ஏனைய சனனாயக அமைப்புக்களையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது. கடந்த காலங்களில் சனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசாரங்களின் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமையை ஒழிப்பதாக உறுதியளித்திருந்த போதிலும், பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவுடன் அதனை சௌகரியமான விதத்தில் புறக்கணித்து வந்துள்ளதை நாம் அவதானிக்கிறோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமையை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஒழிப்பதற்கும், அதனைத் தவறாது நடைமுறைப்படுத்துவதற்கு உதவிசெய்வதற்கும் உறுதியளிக்குமாறு அனைத்து சனாதிபதி வேட்பாளர்களுக்கும் NCC அழைப்பு விடுக்க விரும்புகின்றது.

சனாதிபதி வேட்பாளர்கள் நாட்டைப் பாதிக்கும் முக்கியமான விடயங்கள் தொடர்பான தங்கள் நிலைப்பாடுகளையும் கொள்கைகளையும் கண்டிப்பாக அறிவிக்க வேண்டும். பொருளாதார நெருக்கடியை நிவிர்த்தி செய்தல், தண்டனையின்மை என்னும் கோட்பாட்டை நிவிர்த்திசெய்வதை உள்ளடக்கிய சட்டத்தின் ஆட்சி, திறமையான மற்றும் சுயாதீனமான அரச சேவையை மீட்டெடுத்தல், நிலையான அபிவிருத்தியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளான ஊழல் மற்றும் அது தொடர்புபட்ட விடயங்களை தடுப்பதற்கான சுயாதீனமான அரசியலமைப்பு சபை மற்றும் நீதித்துறை ஆகியவை சார்ந்த கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவை இவற்றுள் உள்ளடங்கும்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், நாட்டில் நீண்டகாலமாக புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான தமது கொள்கைகளைத் தெளிவாகக் கூறுமாறு அனைத்து வேட்பாளர்களிடத்திலும் NCC அழைப்புவிடுக்க விரும்புகிறது. ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் சமூகத்தின் சட்டரீதியான குறைகளை தீர்க்க இயலாமல் போனமையே நாட்டில் இனக்குழுக்களுக்கு இடையில் யுத்தம் ஏற்படுவதற்கும், இனங்களுக்கிடையே பாரிய பிளவுகள் ஏற்படும் நிலைக்கும் இட்டுச் சென்றது என்கின்ற விடயத்தை NCC பல ஆண்டுகளாக கூறிவந்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்களின் அரசியல் சார்ந்த துயர்கள் மற்றும் அவர்கள் வேதனையுடன் அனுபவிக்கும் பாரபட்சமான நிலைமைகளை உள்ளடக்கிய மேற்படி முரண்பாட்டிற்கான மூல காரணங்களை நிவிர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வின் மூலம் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என NCC நம்புகிறது. இத்தகைய ஒரு அரசியல் தீர்வானது, ஒரு ஐக்கியமான நாடு என்கின்ற கட்டமைப்பின் கீழ், கணிசமான சுயாட்சி மற்றும் வடக்கு மற்றும் கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்களுடன் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசமாக அங்கீகரிக்கப்படுதலை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், அரசியல் கைதிகளுக்கான நீதி, கொலைகள், பாலியல் குற்றங்கள் மற்றும் பிற கடுமையான போர்க்கால அட்டூழியங்களுக்கான ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற இன மோதல் மற்றும் போரின் விளைவுகளுக்கு பதிலளிக்கத்தக்க உண்மையான முன்னெடுப்புக்கள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இராணுவம் மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான புதிய நில ஆக்கிரமிப்புக்கள், போரில் மரணித்தவர்களுக்கான நினைவேந்தல்களை மேற்கொள்வதில் தடைகள், கட்டுப்பாடுகள், மிரட்டல் மற்றும் எதிர்ப்பை அடக்குதல் உள்ளிட்ட, தற்போது நடைபெற்றுவரும் மீறல்களை நிவர்த்தி செய்வதற்கான முன்னெடுப்புக்களையும் இது உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அனைத்து வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பதவிகள் மற்றும் அவர்கள் முன்வைக்கும் திட்டங்களில் அனைத்து இலங்கையர்களும் உரிய கவனம் செலுத்தி, தங்கள் வாக்குரிமையை பொறுப்புடன் பயன்படுத்துமாறு NCC அழைப்பு விடுக்கின்றது. அத்துடன், வேட்பாளர்களின் கடந்த கால வரலாறு மற்றும் அவர்களது நடத்தையை ஆராய்ந்து, தீவிர குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல், இனவெறி, எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதன் மீதான அடக்குமுறை போன்றவற்றில் தொடர்புடையவர்களென நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ள வேட்பாளர்களை நிராகரிக்க வேண்டும். வாக்களிப்பதும் ஒரு ஆன்மீக-அரசியல் செயற்பாடு என NCC நம்புகிறது. ஏனெனில், அனைவருக்குமான ஒரு சிறந்த நாட்டை உறுதி செய்யும்பொருட்டு, ஒதுக்கப்பட்ட மற்றும் நலிவுற்ற மக்கள் குழுக்களின்பால் கருணை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை வாக்காளர்கள் காண்பிப்பதற்கான ஒரு வாய்ப்பாக இவ்வாக்களிப்பு அமையும்.

2024 – 07 – 16

**கையொப்பம்**

பேராயர்.அதி.வண.V.பத்மதயாளன் தலைவர் - இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம், பேராயர் அதி.வண.துஷாந்த றொட்ரிகோ - இலங்கைத் திருஅவை, கொழும்பு மறைமாவட்டம், பேராயர் அதி.வண. நிஷாந்த பெர்னான்டோ - இலங்கைத் திருஅவை, குருநாகலை மறைமாவட்டம், அருட்பணி.எபநேசர் யோசப், தலைவர் - இலங்கை மெதடிஸ்த திருஅவை, அருட்பணி. விலி ரணசிங்க - இலங்கை பெப்டிஸ்ட் திருஅவை, அருட்பணி.சமன் பெரேரா, தலைவர் - இலங்கை பிரஸ்பிட்டேரியன் திருஅவை, அருட்பணி. லக்மால் விஜயரெட்ண, தலைவர் - கிறிஸ்தவ சீர்திருத்த திருஅவை, ஆணையாளர் நிஹால் ஹெட்டியாராச்சி, பிராந்திய தளபதி - இரட்சண்ய சேனை, அருள்அறிவர். கிறிஸ்சோ ஹெண்டி, தலைவர் - இலங்கை மக்கள் தேவ அவை, அருட்பணி.ஹரீம் பீரிஸ்,உபதலைவர் - நாற்சதுர சுவிசேஷ திருஅவை, இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு (YMCA), இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு (YWCA), கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் (SCM), இலங்கை வேதாகம சங்கம், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், இலங்கை இறையியல் கல்லூரி, சத்திய வசனம், கொழும்பு இறையியல் கல்லூரி(CTS), கிறிஸ்துவுக்காக வாலிபர் அமைப்பு(YFC) அருட்பணி.சுஜிதர் சிவநாயகம், பொதுச் செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்.

#368/6, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka.
Telephone: +94 (11) 2671723 Fax: +94 (11) 2671721
E-Mail: info@nccsl.org | Website: www.nccsl.org